திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 26 வயது, 31 வயது என்ற வயது வரம்பு, வேலை கொடுப்பதற்கா அல்லது வயது வரம்பு வைத்து வேலையில்லை என்பதற்கா என்று அமைச்சரவர்கள் அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே பவானி தாலுக்காவிலே குமாரபாளையம் என்ற பகுதியிலே லம்பாடி சாதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏழைகள் இருக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, கேள்வி வேடர் சமூகத்தினரைப் பற்றியது, லம்பாடிகளைப் பற்றியது அல்ல.

## அருந்ததியார்களுக்குச் சலுகைகள்

* வினா எண் 91 — திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரிசனங்களில் அருந்ததியார் அல்லது சக்கிலியர் என்ற பிரிவினர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் சலுகைகள் வழங்குவதில் இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு செயற்குறிப்பு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களில் அருந்ததியார்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம், ஏனெனில், அவர்கள் மிகவும் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட மக்களிலேயே இந்த அருந்ததியார்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். ஆகவே அரசு மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் அருந்ததி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். இந்த அரசாங்கம் தனிப்பட்ட விதிமுறை வகுக்க இயலாது என்றாலும் செய்கின்ற காரியங்களில் அவர்களுக்குப் பல சலுகைகள் தந்து, வீடு கட்டுதல், மனை வழங்குதல், உதவித் தொகை வழங்குதல் இதுபோன்ற வகைகளில் சலுகைகள் அளித்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இது மிக முக்கியமான கேள்வியாகும். அமைச்சரவர்கள் இதற்கு விசேஷ கவனம் செலுத்தமுடியாது என்று சொன்னார்கள். இப்பொழுது காலனிகள் கட்டிக் கொடுப்பதிலேகூட, இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குப் பெரும்பான்மையாக, ஏன் மொத்தமாகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது கிடையாது. அது மட்டுமல்ல, பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த நேரத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். அரிசனங்களுக்கு வெட்டப்பட்ட கிணறுகளில் கூட இந்தப் பிரிவினர் தண்ணீர் எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. சட்டத்திலே இடம் இல்லையென்றாலும் விசேஷமாக அவர்களுக்குத் தனியாக ஏற்பாடு செய்து, வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே, குடிதண்ணீர் கொடுப்பதிலே முன்னுரிமை கொடுக்க, விசேஷ கவனம் செலுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபிறகு வீடுகட்டுதல், வீட்டு மனை வழங்குதல் போன்ற காரியங்களில் நானே தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் தண்ணீர் எடுப்பதில் தகராறு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எந்தத் தகராறும் இதுவரை இந்தச் சமூகத்தில் வரவில்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தாழ்த்தப்பட்டவர்களில் வள்ளுவர் என்ற சமூகத்தினர் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அவர்கள்தான் அரிசனங்களுக்குத் திருமணம் செய்து வைப்பவர்கள். அது தவிர அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. அவர்களுக்கும் இதுமாதிரி முன்னுரிமைச் சலுகைகள் அளிக்க சர்க்கார் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் ; தலைவரவர்களே, அரிசனங்களுக்கெல்லாம் திருமணம் செய்து வைப்பவர்கள் அவர்கள்தான் என்பது முறை அல்ல.

அரிசனங்களது தாய் தந்தையர்கள்தான் திருமணம் செய்து வைக்கிறார்கள். தேவையான முன்னேற்பாட்டையும் செய்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சமூகத்தினருக்கும் எல்லா சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

திரு. சொ. ந. பழனிசாமி : பேரவைத் தலைவரவர்களே, அருந்ததியர் சமூகம் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கிறது என்று நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உதவித் தலைவர் திரு. ஓ. எஸ். வேலுச்சாமி அவர்கள் சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. இதற்காக அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி பல சலுகைகளை அறிவித்து அவர்கள் முன்னேற வழிவகை செய்ய வேண்டுமென்று மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி அருந்ததியர் பிரிவுக்காக ஒரு மாநாட்டைக் கூட்டினேன். அதற்கு நமது அரிசன நல அமைச்சரவர்கள் வருவதாகக் கூறி நாள் கடத்திச் சென்றது மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்பதை இங்கே நான் சபை முன்பு அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அருந்ததியர் மக்களின் பேரில் இந்த அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தும் என்பதைச் சொல்வதோடு அவர் அழைத்த இடத்திற்கு வரவில்லையென்று சொன்னார். காலம் வரும்போது நிகழ்ச்சிக்கு நானும் வருவேன்.

திரு. பொ. காளியப்பன் ; தலைவரவர்களே, அருந்ததி மக்களைப் போல், இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களிலே வாழ்கின்ற வலையர் சமூகத்தினர் மிகவும் பின்தங்கிய மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த மாதிரி முன்னுரிமை, சலுகை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வலையர் சமூகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அருந்ததியர் அல்லது சக்கிலியர் என்று சொல்லப் படுகிற சமூகத்தினருடைய வாழ்க்கையை பாட்டா கம்பெனியினர் பறித்து விட்டார்கள். வீதிகளிலே அவர்கள் செருப்பை ரிப்பேர் செய்கின்ற தொழிலைச் செய்து சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்தச் சமூகத்தினரைக் கூட்டுறவு முறையில் ஒன்றுசேர்த்து, செருப்பு தைக்கின்ற தொழிலைச் செய்ய அவர்களுக்கு உதவி கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கையை வளமுறப்படுத்த அரசு முன்வருமா? இன்னொன்று, சேலம் மாவட்டத்தில் நடுப்பட்டியல் கிணறைத் தூர்த்துவிட்ட நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது இந்த நாட்டில், எனவே, அருந்ததியினரைக்

[1979 பிப்ரவரி 19]

காப்பாற்ற கூட்டுறவு முறையில் அவர்கள் தொழில் செய்கின்ற முறையை அமுல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இப்போதே அரசாங்கம் அவர்கள் தொழில் நடத்துவதற்கு வட்டியில்லாக்கடன் வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் நான் தண்ணீர் எடுப்பதில் பிரச்னை இல்லை என்று சொன்னதாக குறிப்பிட்டார்கள். நான் சொன்னது அந்தச் சமூகத்திற்குள்ளே; அவர்கள் சொல்வது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் பிரச்னை.

## மணிமுத்தா ஆற்றின் குறுக்கே பாலம்

* வினா எண் 92—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி—நின்னியூர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள மணிமுத்தா ஆற்றில் பாலம் கட்ட ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மொ. பெரியசாமி : தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி—நின்னியூர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள மணிமுத்தா ஆற்றில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடத்தில் பாலம் கட்ட ரூ. 4.50 லட்சம் செலவில் 1979–80-க்கான இரண்டாம் பாகம் திட்டத்தில் செயல்படுத்த அரசு பரிசீலனையில் உள்ளது.

## பாபனாசம் சாலை—தாம்பரபரணி பாலம் சாலை

*வினா எண் 93—திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—